**களுத்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 69,998 கிரயமான தொலைக்காட்சி இயந்திரம் மற்றும் நூலகப் புத்தகங்களின் இருப்பும் 2017 ஆம் ஆண்டில் கிடைத்த 03 கணனிகளும் மற்றும் 2015 ஆம் ஆண்டில் கிடைத்த ஒரு கெப் வண்டியும் மூலதனமாக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் கணக்குகள் சரிசெய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய வேலைக்கடன் கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 84,647 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 46 நிலையான | விற்பனை செய்யப்பட்ட | சொத்துக்களின் கிரயம் அல்லது கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | சொத்து விடயங்களின் கிரயத்தை இனங்கண்டு சொத்துக் கணக்குகளிலும் நிலையான சொத்து பதிவேடுகளில் இருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களின் கிரயம் கணக்குகளில் இருந்தும் பதிவேடுகளில் இருந்தும் அகற்றப்பட வேண்டும். | செய்யப்பட்ட திகதி தொடர்பாக இனங்காண முடியாமையால் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு முடியாதிருந்தது. |
| (iv) | இருப்புப் பெறுமதியாக பௌதீக இருப்புக்களை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 3,558,258 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான முறைமையை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 37,741,517 தொகையான 04 கணக்கு மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 3,617,888 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பீடு செய்து சீராக்கப்பட வேண்டும். | இது தொடர்பாகப் பரீட்சித்து எதிர்காலத்தில் கணக்குகள் சரிசெய்யப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 08 வருடங்கள் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 285,883 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி மற்றும் 02 வருடங்கள் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 9,061 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதியை சரிசெய்வதற்கான ஆலோசனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து கோரப்பட்டிருந்ததுடன் ஆலோசனை பெறப்பட்டதன் பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 05 வருடங்கள் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 450,000 தொகையான வீதிவிளக்கு வருமானம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | வருமானத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதி விளக்கு வருமானத்தை பதிவழிப்பதற்கு அறிவிக்கப்படாமையினால் பதிவழிப்பதற்கு முடியாதுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலை என்பன காணப்படாமையினால் ரூபா 73,018,616 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுப்படுத்த முடியாதிருந்தது. | சொத்துக்கள் இனங்கண்டு நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும் கொள்வனவு செய்யும் போது இந்தப் பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களை | ஆதனவரிக்காக புதிய கண்டு பிடிப்புக்களைச் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை | ஆதனவரி வலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளுக்கான ஆதனவரி மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உள்ளடக்கிய பகுதிகளில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களின் ஆதன வரிகளுக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | மாவட்ட மதிப்பீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | 160 ஆம் பிரிவு | | நிலுவை ஆதனவரி அறவிடும் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரியை அறவிடும் இறுதிப் படிமுறையான ஆதனங்கள் தடை செய்யப்பட வேண்டும். | ஆதனங்களை தடைசெய்யும் இறுதிப் பட்டியல் தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | | மெய்வையாய்வுச் சபை நியமித்து அல்லது வேறு முறையில் சபைக்குச் சொந்தமான காணிகள் சரியாக இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கோ அல்லது உரித்தை உறுதிப்படுத்துவதற்கான எல்லை வேலி அமைத்து பெயர்ப் பாதாதை பொருத்துவதற்கோ போதியளவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கோ அல்லது உரித்தை உறுதிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணிகளை சரியாக இனங்காண்பதற்கு 2017 ஆம் ஆண்டில் மெய்மையாய்வுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்காகவும் மெய்மையாய்வுச்சபை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 1,507,653 | காலாவதியான இருப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நாகொட உப அலுவலகத்தில் உள்ள 02 வருடங்களை விஞ்சிய பணத்தை இந்த ஆண்டின் வருமானத்திற்கு எடுப்பதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவு | 3,024,929 | சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது சங்கங்களுக்குரிய தகைமைகள் தொடர்பாக பரீட்சிக்காமல் 05 ஒப்பந்தங்கள் கையளிக்கப் பட்டிருந்தன. | சமூக அடிப்படையிலான சங்கங்களிற்கு ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது மேற்கூறப்பட்ட தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். | மேற்கூறப்பட்ட ஒப்பந்த முறைமையின் கீழ் ஒப்பந்தங்களை கையளிக்கும் போது 03/2012 ஆம் இலக்கத்தின் படி சங்கங்களின் இயலுமை, நிதி இயலுமை என்பவற்றை கவனத்தில் கொண்டிருந்ததுடன் குழு பரிந்துரையின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்குத் திட்டமிடப்படும். |
| (உ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 2052 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி | 100,700 | 60 அறிவித்தல் பதாதைகளில் இருந்து அறவிட வேண்டிய கட்டணம் அறவிடப்படவில்லை. | அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறிவிப்பதன் மூலம் 52 அறிவித்தல் பதாதைகளின் பணம் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் பணம் செலுத்தாத பதாதைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,712,853 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,410,156 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,957,320 | 10,802,034 | 7,481,956 | 5,777,486 | 9,089,547 | 10,369,403 | 9,509,836 | 4,272,342 |
| (ii) | வாடகை | 276,600 | 276,600 | 249,600 | 27,000 | 240,000 | 229,800 | 270,300 | 12,000 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,460,000 | 682,209 | 3,497,320 | - | 602,000 | 3,927,666 | 3,927,666 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 25,707,733 | 13,000,000 | 80,578,627 | 28,801,298 | 13,000,000 | 13,000,000 | 39,781,266 | 92,386,788 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

### (அ) வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 5,776,487 தொகையான ஆதனவரி மீதியில் ரூபா 4,390,477 தொகை 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை ஆதனவரி மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 852,521 தொகையான மீதி காணப்பட்டது. | நிலுவை வரி மீதி தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதனங்களைத் தடைசெய்யும் உத்தியோகத்தர்களை நியமித்து ஆதனவரி நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 03 கிராம சேவகர் பிரிவிற்குரிய 465 ஆதனவரி அலகுகளில் இருந்து மீளாய்வாண்டில் சிட்டை இடப்பட்ட வருமானம் ஆன ரூபா 481,442 தொகையில் இருந்து எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | பறதுவ, தியகம, தொடம்முல்ல பிரதேசங்களில் எப்போதும் வெள்ள நீரினால் முழ்குவதனால் அரசியல்வாதிகளின் மூலம் ஆதனவரி அறவிடலைத் தடுப்பதற்கு அச்சுறுத்தப்பட்டிருந்தது. எனினும் ஆதனங்களைத் தடை செய்யும் உத்தியோகத்தர்களை |

| | | |
|---|---|---|
| | | நியமித்து ஆதனவரி அறவிடுவதற்கான சிவப்பு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வஸ்கடுவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் 2017 ஆம் ஆண்டின் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்ற 17 வியாபார நிறுவனங்கள் 2018 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 17 வியாபார நிறுவனங்களில் 06 வியாபாரங்கள் 2018 ஆம் ஆண்டில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவில்லை. |
| (ii) | சுற்றுலாச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் மற்றும் உணவகங்களில் இருந்து ஒரு சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடும் போது 09 ஹோட்டல்களில் இருந்து பட்டயக் கணக்காளரால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்குகள் பெறப்பட்டிருக்கவில்லை. | பட்டயக் கணக்காளரால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்குத் தொகுதிகளின் பிரகாரம் 01 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பட்டயக் கணக்காளர் ஒருவர் உறுதிப்படுத்திய கணக்குத் தொகுதியை பெற்று வரி அறவிடப்படுவதுடன் அவ்வாறில்லாத சுற்றுலா ஹோட்டல்களுக்காக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) உப விதிகள்** | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான | சகல விடயங்களுக்காக | 2015 மே 28 ஆந் திகதி வர்த்தமானியில் |

| | | |
|---|---|---|
| பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையினால் 04 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | வும் உபவிதி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பகிரங்கப்படுத்தப்பட்ட 15 உபவிதிகளில் 1998 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 04 அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் ஏற்றுக் கொண்டிருந்தன. முச்சக்கர வண்டி உப விதியும் விதிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 107.52 மில்லியன் நிதிஏற்பாட்டிற்காக கட்டுநிதி தேவை தீர்மானிக்கப்பட்டு கட்டுநிதி திட்டமொன்று செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | வருடாந்த கட்டுநிதி தேவையினை தீர்மானித்து செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்படும். |

**(இ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டம்**

| | | |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 03 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயல்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். |

**(ஈ) செயலாற்றல் மதிப்பீடு**

| | | |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்து கணக்கீடு செய்யும் முறைமை ஒன்று சபையிடம் காணப்படவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்பட்டு அளவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்யும் முறைமை ஒன்றைத் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| | | |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய கொள்கை உபாய வழிகளை இனங்கண்டு நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 இன் பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகளை இனங்கண்டு நிதியேற்பாடு ஒதுக்கப்பட வேண்டி இருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பாதீட்டில் இந்தத் தவறு திருத்தப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டு முதல் 2030 வரை நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாகொட வாகனத் தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 970,404 தொகையான வாடகைப் பணம் 2019 மார்ச் வரையிலும் அறவிடப்படவில்லை. | வாகனத் தரிப்பிட வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கையளிக்கப் பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் செயல் திட்டத்திற்காக 06 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்ட போதிலும், நேர்ஊழிய அடிப்படையின் கீழ் எந்த ஒரு செயற்திட்டமும் அமுல்படுத்தப்படவில்லை. | நேர் ஊழிய முறையின் கீழ் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தின் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் பிரீமிக்ஸ் பிரிவிற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் அங்கீகாரத்தின்படி 2019 ஆகஸ்ட் 14 காலம் வரை சேர்க்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (ஆ) 09 வருட காலம் முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 197,060 தொகை மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து 02 வருட கால எல்லையிலிருந்து காணப்பட்ட ரூபா 111,930 கடன் தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட்ட வேண்டும். | வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் மரணமடைந்த உத்தியோகத்தரின் நிலுவை மீதி வாழ்க்கைத் துணையினால் செலுத்துவதற்கு இனங்கப்பட்டிருந்தது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடைமுறைக் கணக்கில் மாதாந்த சராசரி மீதி ரூபா 45 மில்லியனை விஞ்சி இருந்ததுடன் அந்தப் பணம் பொது மக்களின் தேவைக்காக ஈடுபடுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல் அல்லது அவ்வாறில்லையாயின் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்து வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்கின் மீதி பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையில் அமுல்படுத்தப்பட்டிருக்கின்ற அபிவிருத்தி செயல்திட்டங்கள் மற்றும் சொத்துக்களை கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பில் தேவையான மீதி பேணப்பட்டிருந்தது. மேலும், 2018 ஆம் ஆண்டில் கடன் கொடுத்தோராக ரூபா 25.25 மில்லியன் தொகை ஒன்று காணப்பட்டிருந்தது. |

## 3.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியேற்பாட்டின் கீழ் | சொத்துக்கள் பயன்பாட்டிற்காக | உக்காத கழிவுப் பொருட்களை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,996,332 செலவினத்தில் உக்காத கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் மற்றும் கழிவுகளை தரம் பிரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 494,500 பெறுமதியான பேலீன் இயந்திரம் என்பன 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். | சேகரிப்பதற்கான கட்டிடத்தில் பேலின் இயந்திரம் பொருத்தப்பட்டு கழிவுப் பொருட்களை தரம் பிரிக்கும் நடவடிக்கைகள் முறையாக செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதேச வாசிகளின் கடுமையான எதிர்ப்பின் அடிப்படையில் இந்தச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 591,300 கிரயமான 45 தார் பெரல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்று வேலைத்தளத்தில் காணப்பட்டது. | தார் பரல்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தத் தார் பெரல்களைப் பயன்படுத்தி 2019 யூலை அளவில் 03 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (இ) | நெனசல நிலையம் 2017 ஆம் ஆண்டில் மூடப்பட்டிந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் 18 விடயங்கள் நாகொட உப அலுவலகத்தில் 2019 மார்ச் 31 வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்த இந்த நெசனல நிலையம் 2018 ஆம் ஆண்டில் மீண்டும் உத்தியோகத்தர்களைச் சேர்த்து ஆரம்பிக்கப்பட்டதுடன் மிகவும் சனநெருக்கடி மிக்க இடத்தில் தாபிப்பதற்காக தற்போது வஸ்கடுவ புதிய கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இருந்து நன்கொடையாகக் கிடைத்த KV 12.5 | மின்பிறப்பாக்கி இயந்திரத்தை பழுதுபார்த்து பாவனைக்கு | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மின்பிறப்பாக்கி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அதனைப் பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | |
| (ஆ) | 772 நூலகப் புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தொலைந்து போன புத்தகங்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2019 யூலை 09 ஆந் திகதிய மாதாந்த கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.7 பெறுகைகள்**

**3.7.1 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தார் இட்டு வீதி அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டின் படி மணல், சிப்ஸ் கல் மற்றும் தார் தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் கொள்வனவுகளை மேற்கொண்டு அளவீடு செய்யும் முறைமை ஒன்று இன்றி நிர்மாண ஒப்பந்த சங்கத்திற்கு வீதிகளை நிர்மாணிப்பதற்காக 04 செயற்திட்டங்களுக்கு ரூபா 1,075,730 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் மூலப்பொருட்களின் தேவையை இனங்கண்டு அவற்றை கொள்வனவு செய்தல் மற்றும் அளவீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | மூலப்பொருட்களை கொள்வனவு செய்து கணக்கீடு செய்தல் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படுகின்றது. |